මිනිස්බල හා රැකීරක්ෂා දෙපාර්තමේන්තුව

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம்

Department of Manpower and Employment

# කාර්යසාධන වාර්තාව

# செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

# 2018

**உள்ளடக்கம்**

**1. அறிமுகம்**

1.1 மனிதவலு மற்றும வேலைவாய்ப்புத் திணைக்களம்
1.2 கடமைகள் புரிகின்ற விடயப்பரப்பு
1.3 மூலோபாயப் போக்குகள்
1.4 திணைக்களத்தின் போக்கு
1.5 நீண்டகால இலக்குகள்
1.6 திணைக்களத்தின் குறிக்கோள்கள்
1.7 திணைக்களத்தின் பிரிவுகள்

**2. நிறுவனக் கட்டமைப்பு**

2.1 அங்கீகரிக்கப்பட்டுள்ள, மற்றும் நிலையானஆளணியின் தகவல்கள் 2018.12.31
2.2 மனிதவள அபிவிருத்தி உதவியாளர்களின் தகவல்களின் சுருக்கம் - 2018

**3. நிர்வாகப் பிரிவு**

3.1 பதவியணியின் தகவல்கள்
3.2 பதவியணியினருக்கான பயிற்சி

**4. நிதிப் பிரிவு**

**5. தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு**

5.1 தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

5.2 தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம்

5.3 தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின்போது பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள்

**6. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவு**

6.1 தொழிற்சந்தை தகவல் அலகு

6.2 தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை அமுல்படுத்தல் பிரிவு

6.3 தொழில் மத்திய நிலையம் மற்றும் அதன் முன்னேற்றம்

## 1. அறிமுகம்

### 1.1மனிதவலு மற்றும வேலைவாய்ப்புத் திணைக்களம்

2010.02.12 ஆம் திகதிய 1640 / 31 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியிலுள்ள ஒழுங்குவிதிகளின்படி மனிதவலு மற்றும வேலைவாய்ப்புத் திணைக்களம் 2010 ஆம் ஆண்டில் தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. தற்போது தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்ரகமுவ அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்குகின்ற இத்திணைக்களத்திடம் அரச தொழில் சேவைகளை வழங்குதல் மற்றும் தேசிய மனிதவள, வேலைவாய்ப்புக் கொள்கைகளின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 1.2கடமைகள் புரிகின்ற விடயப்பரப்பு

இத் திணைக்களத்தினால் கீழ்க்காணும் கடமைகளைப் புரிவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- தேசிய மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கையினைத் தயாரித்து நடைமுறைப்படுத்துதல்.
- தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள்.
- தொழில் வழிகாட்டல் தொடர்பான நடவடிக்கைகள்.
- தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல்.
- தொழில் இல்லம் (Jobs Net) மூலம் வழங்கப்படுகின்ற ஏனைய சேவைகள்

  மேலும் மேற்படி விடயங்களுடன் இணைந்ததும் தொடர்புபட்டதுமான ஏனைய சேவைகள்.

## 1.3 மூலோபாயப் போக்குகள்

**<u>தொலைநோக்கு</u>**

உலக தரத்தில் இலங்கையின் தொழிற்படை

**<u>பணிப்பிரகடனம்</u>**

பரந்த ஆற்றல்களைக் கொண்ட சுறுசுறுப்பான மற்றும் உலகளாவிய போட்டிமிக்க தொழிற்படையொன்றை உருவாக்குதல் மற்றும் எமது மனிதவளங்களின் மொத்தப் பலத்தை இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக ஈடுபடுத்துதல்.

### 1.4திணைக்களத்தின் போக்கு

2010 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இத் திணைக்களத்தால், இதுவரை தொழில் சந்தை தகவல் அலகின் ஊடாக நடாத்தப்பட்ட ஆய்வுகளைப் பயன்படுத்தி,தொழில் வழிகாட்டல் மற்றும் தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் தொடர்பில் அமுல்படுத்தப்பட்டுள்ள பல நிகழ்ச்சிகள் ஊடாக, நன்மை பெறுநர்களுக்குப் பயனைப் பெற்றுக்கொடுத்து, இந்த நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் பொருட்டு, வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கு தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

## 1.5நீண்டகால இலக்குகள்

1. உலகளாவிய போட்டிமிக்க, ஆற்றல்களுடைய மற்றும் பல்வகை ஆற்றல்களுடன்கூடிய இலங்கை தொழிற்படையொன்றை உருவாக்குதல்.
2. வேலையின்மையினைக் குறைக்கும் பொருட்டு பலவிதமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
3. திட்டமிடப்பட்ட, பரிபூரணமான தொழிற்சந்தைத் தகவல் வலையமைப்பொன்றை உருவாக்குதல்.

### 1.6திணைக்களத்தின் குறிக்கோள்கள்

கீழ்காணும் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேற்படி இலக்குகளை அடையலாம்.


1. தேசிய மனிதவள கொள்கையை உருவாக்கி நிகழ்ச்சிகளை அமுலாக்குதல்.
2. இருக்கும் திறன்கள்தொழில்வாய்ப்புகளுடன் ஒத்திருக்காமை என்னும் அமைப்பு ரீதியான வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்தல்.
3. நிகழ்காலத்து தொழிற்படையைச் சார்ந்த மற்றும் எதிர்காலத்தில் தொழிற் சந்தைக்குள் பிரவேசிக்கக்கூடிய சகல இலங்கையர்களுக்கும், சரியான தொழில்துறையைத் தீர்மானித்துக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.
4. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முன்னறிவித்தல்.
5. முறைசாரா துறையை அபிவிருத்தி செய்தல்.
6. தனியார் துறை வேலைவாய்ப்புகளுக்காக தொழில் நாடுவோரை ஊக்குவித்தல்.
7. சுயாதீன வேலைவாய்ப்பு சேவைகளை வழங்குதல்.
8. அவதானத்திற்கு உட்பட்டுள்ள குழுக்கள், அங்கவீனர்கள் மற்றும் அபிவிருத்தி குன்றிய பகுதிகளில் வாழ்கின்ற நபர்களுக்கு மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புகள் சம்பந்தமான வசதிகளை வழங்குதல்.
9. வேளிநாட்டு மற்றும் உள்நாட்டு ரீதியாக, சரியான தொழிற்சந்தைத் தகவல்களை அனைத்து இலங்கையர்களுக்கும் பெற்றுக் கொடுத்தல்.
10. உள்நாட்டு மற்றும் உலக தொழிற் சந்தைப் போக்குகளை முன்னறிவிப்புச் செய்தல்.

இவ்வாறாக வேலையின்மையைக் குறைத்தல் மற்றும் சிறந்த தொழில்களை ஏற்படுத்துதல் எனும் நற்பணிகளை நிறைவேற்றும் பொருட்டு இத் திணைக்களம் தமது மனிதவளங்களைப் பயன்படுத்துவதன் ஊடாக பல்வேறு நிகழ்ச்சிகளை அமுல்படுத்துகின்றது.

**1.7திணைக்களத்தின் பிரிவுகள்**

- நிர்வாகம், திட்டமிடல் மற்றும் முன்னேற்ற கண்காணிப்புப் பிரிவு
- கணக்குப் பிரிவு
- தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு.
    - தொழில் உருவாக்கல் மேம்படுத்தல் பிரிவு
    - தொழில் வழிகாட்டல் பிரிவு
- மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு
    - தொழிற் சந்தை தகவல் பகுதி
    - தேசிய மனிதவளங்கள் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கை பகுதி
    - பொதுமக்கள் தொழில்வாய்ப்பு சேவை

## 2.நிறுவனக் கட்டமைப்பு




1. கிராமிய வேலைவாய்ப்பு மற்றும் நுண் நிதி நிகழ்ச்சித்திட்டம்
2. முறைசாராத் துறையில் வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு நிகழ்ச்
3. தொழில்வான்மை அபிவிருத்தி நிகழ்ச்
4. தொழிற் குழு நிகழ்ச்சி

1. தொழில் வழிகாட்டல் தகவல் வலையமைப்பினை உருவாக்கல் ∴விநியோகித்தல்
2. தொழில் வழிகாட்டல் கல்வி ∴ஆராய்ச்சிகள்
3. தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல்

1. நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் அமுல்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்
2. கள நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு
3. புதிய நிகழ்ச்சிகளை இனங் காணல் ∴திட்டமிடுதல்.

1. பொது நிர்வாகம்
2. பணியாளர் மற்றும் நிறுவன நடவடிக்கைகள்.
3. திணைக்களத்தின் போக்குவரத்து நடவடிக்கைகள்
4. களஞ்சிய சேவை
5. 5. நலன்புரி சேவைகள;

1. வருடாந்த திட்டங்களையும் மற்றும் அறிக்கைகளையும் தயாரித்தல்
2. பணியாளர் அபிவிருத்தி
3. முன்னேற்ற மீளாய்வு நடவடிக்கைகள்
4. ஏனைய பிரிவுகளுடனான ஒருங்கிணைப்பு
5. திணைக்கள வெளியீடுகள்

1. தொழிற் சந்தை போக்குகள் பற்றிய ஆய்வு
2. தொழிற் சந்தை தகவல்களை சேகரித்தல்
3. பகுப்பாய்வு செய்தல் மற்றும் விநியோகித்தல்.

1. மனிதவள முன்னறிவிப்புச் செய்தல்
2. துறைசார் மனிதவள திட்டமிடல்
3. தொடர்புபட்ட நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு ஊடாக திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
4. மனிதவள அபிவிருத்திக்கு உரிய கொள்கைகள் மற்றும் பிரேரணைகளை அமுல்படுத்துதல்.

1. தேசிய வேலைவாய்ப்பு சேவை வலையமைப்பு ஒன்றை அமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.
2. வேலைவாய்ப்பு சேவை வழங்கும் நிறுவனங்களிடையில ான தொடர்புகள்
3. தொழிற் சந்தை

1. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள்

1. திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

## 2.1 அங்கீகரிக்கப்பட்டுள்ள, மற்றும் நிரந்தர ஆளணியின் தகவல்கள் 2018.12.31

| தொடர் இல. | பதவி | உரிய சேவை | அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆளணி | நிலையான ஆளணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர் நாயகம் | இ.நி.சே. (விசேட) | 1 | 1 | 0 |
| 2 | பணிப்பாளர் (நிர்வாகம்) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 3 | பணிப்பாளர் (தொழில் உருவாக்கல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.நி.சே. I | 1 | 0 | 1 |
| 4 | பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல் மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.நி.சே. I | 1 | 1 | 0 |
| 5 | பிரதம கணக்காளர் | SLAcS I | 1 | 1 | 0 |
| 6 | உள்ளக கணக்காய்வாளர் | SLAcS II/III | 1 | 0 | 1 |
| 7 | கணக்காளர் | SLAcS II/III | 1 | 0 | 1 |
| 8 | உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) | இ.நி.சே. II/III | 2 | 0 | 2 |
| 9 | உதவி பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல் மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.நி.சே II/III | 2 | 1 | 1 |
| 10 | உதவி பணிப்பாளர் (தொழில் உருவாக்கல்மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.நி.சே. II/III | 2 | 0 | 2 |
| 11 | உதவி பணிப்பாளர் (மனிதவலு திட்டமிடல் மற்றும் ஆய்வுகள் பிரிவு) | இ.தி.சே. II/III | 1 | 1 | 0 |
| 12 | உதவி பணிப்பாளர் (தொழில் உருவாக்கல்மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு) | இ.தி.சே II/III | 1 | 1 | 0 |
| 13 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.சே. அதி | 1 | 0 | 1 |
| 14 | மொழி பெயர்ப்பாளர் | மொழி பெயர்ப்பாளர் சேவை I/II | 1 | 0 | 1 |
| 15 | தகவல தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | இ.த.தொ.தொ.சே. 2ஆம் வகுப் II/III | 1 | 0 | 1 |
| 16 | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்கள் | களவேளை/அலுவல கம் சார்ந்த II/III | 1 | 0 | 1 |
| 17 | தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள் | இணைந்த சேவை | 85 | 32 | 53 |
| 18 | கருத்திட்ட உத்தியோகத்தர் | இணைந்த சேவை | 3 | 3 | 0 |
| 19 | மனிதவள அபிவிருத்தி உதவியாளர் | இணைந்த சேவை | 560 | 510 | 50 |
| 20 | பொது முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.சே. I/II/II | 25 | 23 | 02 |
| 21 | சாரதி | சாரதி சேவை | 8 | 7 | 1 |
| 22 | அலுவலக உதவியாளர் | அ.உ.சே. II/III | 7 | 7 | 0 |
| | **மொத்தம்** | | **707** | **589** | **118** |

**2.2 மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள, தொழில் வழிகாட்டல் ∴கருத்திட்ட ∴ மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தகவல் சாராம்சம் - 2018**

| மாவட்டம் | பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை | பிரதேச ரீதியில் இணைக்கப்பட்டுள்ள ஆளனியினரின் எண்ணிக்கை | மாவட்ட ரீதியில் இணைக்கப்பட்டுள்ள ஆளனியினரின் எண்ணிக்கை | மொத்தம் | பிரதேச ரீதியிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை | மாவட்ட ரீதியிலான வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை | வெற்றிடங்களின் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| அம்பாறை | 19 | 20 | 6 | 26 | 0 | 0 | 0 | 0 |
| அனுராதபுரம் | 22 | 15 | 7 | 22 | 5 | 0 | 0 | 5 |
| பதுளை | 15 | 09 | 3 | 12 | 6 | 0 | 0 | 6 |
| மட்டக்களப்பு | 14 | 14 | 8 | 22 | 0 | 0 | 0 | 0 |
| கொழும்பு | 13 | 13 | 4 | 17 | 0 | 0 | 0 | 0 |
| காலி | 19 | 20 | 12 | 32 | 0 | 0 | 2 | 0 |
| கம்பஹா | 13 | 14 | 11 | 25 | 0 | 0 | 2 | 0 |
| அம்பாந்தோட்டை | 12 | 13 | 16 | 29 | 0 | 0 | 2 | 0 |
| யாழ்ப்பாணம் | 15 | 14 | 7 | 21 | 1 | 0 | 0 | 1 |
| கண்டி | 20 | 19 | 14 | 33 | 1 | 0 | 0 | 1 |
| கேகாலை | 11 | 12 | 12 | 24 | 0 | 0 | 2 | 0 |
| களுத்துறை | 14 | 14 | 12 | 26 | 0 | 0 | 0 | 0 |
| குருநாகல் | 30 | 37 | 14 | 51 | 0 | 0 | 7 | 0 |
| மாத்தறை | 16 | 17 | 13 | 30 | 0 | 0 | 1 | 0 |
| மாத்தளை | 11 | 9 | 10 | 19 | 2 | 0 | 0 | 2 |
| மொனறாக்கலை | 11 | 11 | 6 | 17 | 0 | 0 | 0 | 0 |
| நுவரெலியா | 5 | 4 | 1 | 5 | 1 | 0 | 0 | 1 |
| புத்தளம் | 16 | 12 | 3 | 15 | 5 | 0 | 0 | 5 |
| பொலன்னறுவை | 7 | 5 | 4 | 9 | 2 | 0 | 0 | 2 |
| இரத்தினபுரி | 17 | 17 | 7 | 24 | 0 | 0 | 0 | 0 |
| திருகோணமலை | 11 | 8 | 4 | 12 | 3 | 0 | 0 | 3 |
| வவுனியா | 4 | 4 | 2 | 6 | 0 | 1 | 0 | 1 |
| மன்னார் | 5 | 3 | 2 | 5 | 2 | 0 | 0 | 2 |
| கிளிநொச்சி | 4 | 3 | 7 | 10 | 1 | 0 | 0 | 1 |
| முல்லைத்தீவு | 6 | 0 | 2 | 2 | 6 | 0 | 0 | 6 |
| **மொத்தம்** | **330** | **307** | **187** | **494** | **35** | 1 | **16** | **36** |

## 3. நிர்வாகப் பிரிவு

நிர்வாகப் பிரிவின் கீழ் பின்வரும் கிளைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

i. நிறுவனப் பிரிவு
ii. திட்டமிடல் மற்றும் கண்காணித்தல் பிரிவு

திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்ளும்போது, உள்ளக நிர்வாக செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பதன் மூலம் உன்னதமான செயலாற்றல்களை அடைந்துகொள்வதற்காக திணைக்களத்தின் சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கு ஒத்துழைப்புகளை வழங்குதல், நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுத்து மதிப்பீடுசெய்தல், மேம்படுத்துதல் என்பன நிர்வாகப் பிரிவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிரதான கடமைகளாகும். மேலும் திணைக்களத்தின் தரத்தினைப் பேணிச்செல்வதற்காக பயனுள்ள, பௌதீக ரீதியான அபிலாஷைகளுக்கும், செயற்பாடுகளுக்கும் பொருத்தமான, உயர்தரம்மிக்க, பணியாட் தொகுதியினரை உருவாக்கவும், பிரிவுகளினிடையே சிறந்த, முறையான ஒருங்கிணைப்பினை ஏற்படுத்துதல், பணியாட்டொகுதியின் நலன்களை மேம்படுத்தவும், ஏனைய பிரிவுகளுக்குத் தேவையான ஒத்துழைப்புகளை வழங்குதல் நிருவாகப் பிரிவின் பொறுப்புக்களாகும்.

### 3.1ஆளணி பற்றிய தகவல்கள்

#### 3.1.1.பதவிநிலை உத்தியோகத்தர்களைப் புதிதாகச் சேர்த்தல்

| தொடர் இல. | பெயர் | பதவி | சேவையில் சேர்ந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஹேமலதா | பிரதான கணக்காளர் | 2018.06.12 |

#### 3.1.2. பதவிநிலை உத்தியோகத்தர்களின் இடமாற்றம்

| தொடர் இல. | பெயர் | பதவி | சேவையில் சேர்ந்த திகதி |
|---|---|---|---|
| 1 | திரு.எம்.என்.குணவர்த்தன | பணிப்பாளர் | 2018.02.28 |
| 2 | திரு.டி.எச்.தாஜுதீன் | பிரதான கணக்காளர் | 2018.06.01 |
| 3 | திரு.எம்.ஏ.டி.செனரத் | பணிப்பாளர் | 2018.08.01 |

## 3.2 ஆளனியினருக்கான பயிற்சி

மனிதவலு,வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அலுவலர்கள் 2018ஆம் ஆண்டில் கீழ்வரும் பயிற்சிநெறிகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

| தொடர் இல. | பாடநெறியின்.்.நிகழ்ச்சியின் பெயர் | நடாத்தப்பட்ட திகதி | செலவு |
|---|---|---|---|
| | உள்நாட்டு பயிற்சி | | |
| 1 | அலுவலக முறைகள் மற்றும் கோவைப்படுத்தல் பயிற்சி 64 பேருக்கு வழங்கப்பட்டது. | 2018.02.28 /2018.02.23 | 4337 |
| 2 | SDFL(Skills Development Fund LTD) | 2018.05.22-2018.05.23 | 17,000 |
| 3 | பெறுகை நடைமுறைகள் தொடர்பான பயிற்சித் திட்டம் 50 பேருக்கு நடாத்தப்பட்டது. | 2018.05.15/2018.05.11 | 38,165 |
| 4 | தொழில் வழிகாட்டல் பயிற்சி திட்டம் | 2018 | 120,000 |
| 5 | உளவள ஆலோசனை டிப்ளோமாப் பாடநெறி | 2018 | 70,000 |
| 6 | Government Payroll System Training Programme | 2018.07.24/25/26 | 36,000 |
| 7 | ஆலோசனை தொடர்பிலான பட்டப்பின்படிப்புப் பாடநெறி | 2017-2018 | 40,000 |
| 8 | இணையப் பாதுகாப்பு மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி 39 பேருக்கு வழங்கப்பட்டது. | 2018.08.27 | 10,710 |
| 9 | Project Proposal Programme 05 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. | 2018.11.14-15 | 35,000 |
| 10 | தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தலின் புதிய போக்குகள் | 2018.11.16 | 72,065 |
| 11 | Project Management 02 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. | 2018 | 37,000 |
| 12 | Public Procument | 2018 | 33,000 |
| 13 | Office Management | 2018 | 37,500 |
| 14 | தொழில் வழிகாட்டல் தேசிய டிப்ளோமா பாடநெறி | 2019 | 810,000 |
| 15 | தமிழ் மொழி பயிற்சி | 2018.08.07 - 2018.10.26 | 248,990.00 |
| | **வெளிநாட்டு பயிற்சி** | | |
| 1 | Mobile App Development | 2018.05.21-2018.06.34 | 673,558 |
| 2 | WAPES மாநாட்டை பிரதிநிதித்துவப்படுத்துதல் | 2018.07.24 – 2018.07.25 | 311,727 |
| 3 | Korean Workshop | 2018.10.28- 2018.11.04 | 462,212 |
| 4 | சீனாவில் இடம்பெற்ற செயலமர்வில் பங்குபற்றுதல் | 05.11.2018 - 27.11.2018 | 180,315 |
| 5 | ILO Meeting Switzerland | 2018.11.13 – 2018.11.18 | 150,413 |
| 6 | ItalyWorkshop | 28.11.2018 - 02.12.2018 | 89,889.64 |

## 4. நிதிப்பிரிவு

2018 ஆம் ஆண்டில் மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தின் 25 மாவட்டச் செயலகங்கள் 316 பிரதேச செயலகங்கள் மற்றும் தலைமைக் காரியாலயத்தில் பணியாற்றும் 588 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் சம்பளம் வழங்குதல் உள்ளிட்ட அவ்வலுவலகங்களில் உள்ள பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு 28.8 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளது.

பெறுகைத் திட்டங்களுக்கமைய 49 மடிக்கணணிகள் கொள்வனவு செய்யப்பட்டு திணைக்களத்தின் 49 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே குருணாகல், யாழ்ப்பாணம், அம்பாறை மற்றும் நுவரேலியா தொழில் நிலையங்களுக்கு 2.8மில்லியன் ரூபாய்கள் வழங்கப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டு முதற்தடவையாக 'ரெக்கியா ஹரசர' என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டமொன்று நிறுவன மற்றும் தனிநபர் மதிப்பட்டுக்காக குருணாகல், அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை மையப்படுத்தி நடாத்தப்பட்டது. இதற்காக அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்குகளிலிருந்து 1.8 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டு மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களமானது செலவுத் தலைப்பு இலக்கம் 328 இற்கு, திறைசேரியிலிருந்தும் அமைச்சிலிருந்தும் கிடைத்த ஒதுக்குகளை செலவிட்ட முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | ஒதுக்கீடு (ரூபா.000) | செலவீனம் (ரூபா.000) | மீதம் (ரூபா.000) | வீதம்(%) |
|---|---|---|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 352,655 | 348,649 | 3,958 | 98.89% |
| மூலதன செலவுகள் | 31,100 | 30,0395 | 704 | 97.74% |
| அமைச்சினால் வழங்கப்பட்ட ஒதுக்குகள்193-1-2-2-2509 | 3,733 | 3,275 | 457 | 98.80% |

இத்திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்குமான பதில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு ஐயவினாவை சமர்ப்பித்த நிறுவனம் | 2018 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட எண்ணிக்கை |
|---|---|
| அரச கணக்காய்வு பிரிவு (கணக்காய்வு திணைக்களம்) | 06 |
| உள்ளக கணக்காய்வு பிரிவு (மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்) | 03 |
| உள்ளக கணக்காய்வு பிரிவு (தொழில் திணைக்களம்) | 01 |

அரச உத்தியோகத்தர்களின் முற்பணம் டீ கணக்கில் 2018ஆம் ஆண்டு, பின்வரும் அடிப்படையில் செலவுகள் மேற்கொள்ளப்பட்டன.

| கடன் வகை | பெற்றுக் கொண்டவர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| இடர் கடன் | 68 | 13,114,689.06 |
| விழா முற்பணம் | 398 | 3,980,000.00 |
| விசேட முற்பணம் | 23 | 92,000.00 |
| **மொத்தம்** | | **17,186.689.06** |

## 5. தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு

இளைஞர் வேலைவாய்ப்புப் பிரிவு என்று 1997 ஆம் ஆண்டில் இளைஞர் விவகார அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவு 2010 ஆம் ஆண்டில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம்ஸ்தாபிக்கப்படுகின்றபோது இத்திணைக்களத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது.

தொழில் வழிகாட்டல், தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் பிரவினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு,ஒன்றுடனொன்று தொடர்புபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த இலங்கைத் தொழிற்படையினை, முறையான தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், அதேபோல தேசிய கொள்கைத்திட்டத்தினை தனிநபர் ஆற்றல்களுக்கும், திறமைகளுக்குமேற்ற தொழில்களை விரிவுபடுத்தும் நோக்கில் மீளமைத்தல், போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தக் கடமைகளை ஆற்றுவதற்காக இப்பிரிவு இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரிவுகள், உதவிப் பணிப்பாளர் ஒருவரின் வழிகாட்டலின்கீழ் அமுல்படுத்தப்படுகின்றது. இலங்கை பூராகவும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் அலுவலர்கள், மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் மூலம் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் அடிமட்டம்வரை கொண்டுசெல்லப்படுகின்றது.

தொழிலிலற்ற மற்றும் புதிதாக தொழிற் சந்தையில் நுழைகின்ற மற்றும் எதிர்காலத்தில் நுழையவிருக்கின்ற மக்களுக்கு வேவைாய்ப்பு வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் 2018 ஆம் ஆண்டில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சிகளை நடாத்தியது.

**தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகள்;**

**தொழில் உருவாக்கல்**

* தொழில்முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சிநெறிகள்
* தேவைப்பாட்டின் மீதான பயிற்சிநெறிகள்
* பூங்காவன அலங்கார முகாமைத்துவம்
* சுயதொழில் நிகழ்ச்சிகள்
* தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சிகள்

**தொழில் மேம்படுத்தல்**

* பிரதேச தொழிற் சந்தை
* தொழில்களுக்கு அனுப்புதல்

**தொழில் வழிகாட்டல்**

* பல்கலைக்கழக மாணவர்களுக்கான செயலமர்வுகள்
* பாடசாலை நிகழ்ச்சிகள் (உயர்தரம் ∴சாதாரண தரம்)
* ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்
* வேலையற்ற இளைஞர்களுக்கான செயலமர்வுகள்
* பெற்றோர்களுக்கான செயலமர்கள்
* ஊயசநநச ஆந நிறுவனத்ததுடன் இணைந்து பாடசாலைகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள்
* ஹசர சஞ்சிகை

தொழிலொன்றை நாடி இருக்கின்ற மற்றும் புதிதாக தொழிற்சந்தைக்குள் பிரவேசிக்கின்ற மற்றும் எதிர்காலத்தில் பிரவேசிக்கவிருக்கின்ற மக்களுக்கு தொழில் துறையில் வசதிகளை வழங்கும் நோக்கில் மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களம் பலவிதமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது.

சாதாரண தர,உயர்தர மாணவர்கள் மற்றும் பாடசாலை வலையமைப்பிலிருந்து வெளியேறிய மாணவர்களை மையமாகக்கொண்டு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன.**Career Me நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன் அதன் ஊடாக on line ஆளுமை பரிசோதனைக்கு விசேடமாக பாடசாலை** மாணவர்களுக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறுவதுடன், திணைக்கள உத்தியோகத்தர்களால், அந்த ஆளுமை பரிசோதனை தகவல்களின் அடிப்படையில்,தேவையான தொழில் வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

இந்த பாடசாலை குழுவினர்க்கு மேலதிகமாக தேசிய பல்கலைக்கழக வலையமைப்பில் உள்ள மற்றும் வெளிவாரி பட்டத்திற்குரிய பாடநெறிகளைப் பயில்கின்ற மாணவர்களுக்கும் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் வருடாந்தம் நடாத்தப்படுகின்றது. அதன் நோக்கம் படித்த இளைஞர்களின் வேலையின்மையைக் குறைப்பதாகும்

அதேபோல பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு தொழில் துறைகள் பற்றிய விழிப்புணர்வும் செய்யப்படுகின்றது.

கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம் தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல், தொழில் முயற்சியாளர்கள் மற்றும் சுயதொழில் புரிவோர்களை உருவாக்குவதற்காக திணைக்களமானது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. அதன் மூலம் தனியார் துறையில் இளைஞர்கள் தொழிலைப் பெற்றுக்கொள்வதற்காக ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

இலங்கை தொழிற்படையில் 60மூ ஆனோர் முறைசாராத் துறையில் உள்ளடங்குகின்றனர். திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்களான மூன்று நாள் முயற்சியான்மை அபிவிருத்தி பயிற்சிநெறி, சுயதொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம், தொழில் முயற்சியான்மை, தேவைப்பாட்டின் மீதான நிகழ்ச்சித்திட்டம் ஊடாக இந்த முறைசாராத் துறையினை அபிவிருத்த செய்து அதனை முறைசார் அமைப்பில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2018ஆம் ஆண்டில் அமைச்சின் செயலாளரது அனுமதியுடன்'சுனிசி மெஹெவர' என்ற திட்டத்தின் ஒதுக்குகளைப் பயன்படுத்தி விசேட முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள் மற்றும் விசேட அவசியத்தின் அடிப்படையிலான பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

அதற்கு மேலதிகமாக பூந்தோட்ட அலங்காரம், பிரதேச தொழிற்சந்தை நிகழச்சித்திட்டம்,ஹசர சஞ்சிகைகளைத் தயாரித்து வெளியிடுதல் என்பன இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

அதனடிப்படையில், இந்த கிளையின் செயற்பாடுகள் பிரதானமாக, இரண்டு அலகுகள் ஊடாக இடம்பெறுகின்றன.

- தொழில் உருவாக்கல் மற்றும் மேம்படுத்தல் அலகு
- தொழில் வழிகாட்டல் அலகு

**5.1தொழில் வழிகாட்டல்நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார்முன்னேற்றம்**

தொழில் வழிகாட்டல் ↔ தொழில்சார் ஆலோசனை ↔ வேலைவாய்ப்பு ஆலோசனை

தொழில் வழிகாட்டல் என்பது நபர்களின் தொழில்சார் வாழ்க்கை மற்றும் அதன் அபிவிருத்தியினை வெற்றிக்கரமான முறையில் முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு உதவும். தொழில் புரிவோரின் மனப்பாங்கு வளர்ச்சி, வினையூக்கம் மற்றும் தேவையான திறனை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலப்பகுதியில் இப்பிரிவினால் நடாத்தப்பட்ட தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சியின் பெயர் | மதிப்பீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி. | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இலக்குகள் | முன்னேற்றம் | |
| க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | 1.054 | 0.948 | 1865 | 2160 | 54787 |
| க.பொ.த. உயர் தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள். | 1.105 | 0.991 | 1328 | 1402 | 37546 |
| சுயதொழிலுக்கு ஊக்குவிக்கும் நிகழ்ச்சி | 0.947 | 0.804 | 311 | 384 | 11545 |
| தொழில் சவால்களை வெற்றி கொள்ளும் நிகழ்ச்சி | 0.794 | 0.679 | 150 | 149 | 4655 |
| இளம் பட்டதாரிகளுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் (உள்வாரி / வெளிவாரி) | 0.739 | 0.684 | 20 | 20 | 789 |
| ஆசிரியர்களுக்கான தொழில் வழிகாட்டல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 0.637 | 0.601 | 23 | 25 | 1002 |
| பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் | 0.959 | 0.794 | 300 | 348 | 19534 |
| ஹஸர சஞ்சிகை வெளியீடு | 0.300 | 0.159 | 2 | 1 | - |
| **மொத்தம்** | **6.535** | **5.66** | **3999** | **4489** | **129858** |

### 5.1.1. ஹஸர சஞ்சிகை

ஹஸர தொழில் வழிகாட்டல் மற்றும் கல்வி சஞ்சிகையானது 2000 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுவருகின்றது. அத்துடன் இந்த விடயம் தொடர்பாக சிங்கள மொழிமூலத்தில் வெளிவருகின்ற முதலாவது சஞ்சிகை இதுவாகும். இச்சஞ்சிகையானது பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், நகர சபைகள் ஊடாக நிர்வகிக்கப்படுகின்ற நூலகங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. சஞ்சிகைக்குரிய ஆக்கங்களைத் தயாரிக்கும் பணியானது, திணைக்களத்தில் அந்த விடயத்துடன் தொடர்புடைய நிபுணத்துவம் வாய்ந்த அலுவலர்கள் மற்றும் தொழில் வழிகாட்டல் விடயத்துடன் தொடர்புடைய நிபுணத்துவமுடையோரது ஆக்கங்கள் மற்றும் நேரடி கலந்துரையாடல்கள் மூலமாகவும் இடம்பெற்று வருகின்றது. ஆக்கங்களை வெளியிடும்போது திணைக்களத்தின் கடமைகளுடன் தொடர்புடைய கீழ்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம்செலுத்தப்படுகின்றது.

I. தொழில் வழிகாட்டல் விடயத்திற்குரிய ஆக்கங்கள்
II. தொழில சந்தையின் புதிய போக்குகள்
III. தொழில் துறைகள் மற்றும் தொழில் தகுதிகள் பற்றிய விளக்கம்
IV. வெற்றிகரமான தொழிலாளராக அமைந்து நாட்டின் நற்பெயரைக் காத்த நபர்களுடனான நேர்முக கலந்துரையாடல்கள் மூலம் தயாரிப்பட்ட ஆக்கங்கள்
V. பாடசாலை மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுக்கின்ற ஆக்கங்கள்

### 5.2தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார்முன்னேற்றம்

2018 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரையான காலத்தினுள் வெளிக்களத்தில் நடாத்தப்பட்ட தொழில் உருவாக்கல், மேம்படுத்தல் நிகழ்ச்சிகளின் பௌதீக மற்றும் நிதிசார் முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| நிகழ்ச்சியின் பெயர் | மதிப்பீடு ரூ.மி | செலவீனம் ரூ.மி. | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | இலக்குகள் | முன்னேற்றம் | |
| தொழில் முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சிநெறி | 0.541 | 0.515 | 25 | 36 | 1145 |
| பூந்தோட்ட அலங்கார நிகழ்ச்சித்திட்டம் | 0.105 | 0.097 | 3 | 3 | 123 |
| தேவைப்பாட்டின் மீதான பயிற்சி நெறி | 1.687 | 1.559 | 240 | 288 | 9773 |
| பிரதேச தொழிற் சந்தை நிகழ்ச்சித்திட்டம் | 0.458 | 0.462 | 48 | 77 | 7602 |
| **மொத்தம்** | **2.791** | **2.633** | **316** | **404** | **18643** |

## 5.3 தொழில் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின் ஊடாக நடாத்தப்பட்ட பயிற்சித் திட்டங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட புகைப்படங்கள்





முயற்சியாண்மை நிகழ்ச்சித்திட்டம் - ஹிங்குரக்கொட
– 2018 .06 .20 – 2018 .06 . 22







வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் -2018.11.26 – வவுனியா மாவட்டச் செயலகம்





க.பொ.த..உ.த. மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் - 2018.11.26 - வவுனியா மாவட்டச் செயலகம்

## 6. மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வுகள் பிரிவு

இந்த பிரிவானது பிரதான 03 அலகுகளின் கீழ் செயற்படுகின்றது.

- ☆ தொழிற்சந்தை தகவல் அலகு
  - தொழில் மத்திய நிலையம்
- ☆ தேசிய மனித வள மற்றும் சேவை வாய்ப்பு கொள்கை வழிகாட்டல் அலகு
  - தொழில் மத்திய நிலையம்
- ☆ தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை அமுலாக்கல் அலகு

சர்வதேச தொழிற்சந்தை வலையமைப்பில் இலங்கையின் பங்குதாரர் என்ற ரீதியில் வினைத்திறனான, உற்பத்தித்திறன்மிக்க தீர்மானங்களை எடுப்பதற்காகவும், கொள்கை வகுத்தல் செயற்பாடுகளுக்காகவும், கல்வித் துறையிலான கல்விச் செயற்பாடுகள் மற்றும் பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வோருக்குத் தேவையான தொழிற்சந்தை தகவல்களைப் பயன்படுத்துபவர்களுக்கு வசதிகளை வழங்கும் நோக்கில் தாபிக்கப்பட்ட ஒரு பிரிவாகும்.

தொழிற் சந்தை தகவல்களைத் திரட்டும் போது துரிதமாக மாறுபடுகின்ற திறன்களைக் கொண்ட மனித வளங்களுக்கான தொழிற் சந்தைக் கேள்வியை முறையாக மேற்பார்வை செய்தல், மதிப்பீடு செய்தல் அத்தியாவசியமாகின்றது. மனிதவள திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவின் ஊடாக தொழிற்சந்தைத் தகவல்கள் திரட்டப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்டு, விநியோகிக்கப்படுகின்றன.

அவ்வாறே இலங்கையின் தற்போதைய அபிவிருத்தித் தேவைக்கேற்ப தொழிற்சந்தை ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை நடாத்துதல், ஊழியத்திற்கான கேள்வி மற்றும் வழங்கல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் அத்தகவல்களை விநியோகித்தல் என்பன இப்பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

### தொழிற்சந்தை தகவல் அலகு

**2018ஆம் ஆண்டு தொழிற்சந்தை தகவல் அலகின் ஊடாக செயற்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்**

இலங்கையிலுள்ள இளைஞர்களிடையே வேலைவாய்ப்பின்மை ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பல இளைஞர்கள் வருடாந்தம் உயர்கல்வியை பெற்று அதனை நிறைவு செய்தாலும் தொழிற்சந்தைக்கான கேள்வி அதிகரித்த வண்ணமே உள்ளது. இவ்வாறு அதிகரித்த வேலையின்மைக்கான பிரதான காரணம், தொழிற்சந்தை விபரங்களை சரியான விதத்தில் அறிந்து கொள்ள முடியாமல் உள்ளமையாகும். இத்தகைய தகவல்களை அறிவதிலுள்ள சிக்கல்களைத் தவிர்க்கும் பொருட்டு இலங்கையில் பல்வேறு துறைகளில் காணப்படுகின்ற தொழில் வாய்ப்புகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டு, அது தொடர்பான தகவல்கள் வேலைவாய்ப்பை எதிர்பார்ப்பவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

**01. 'மேன்பவர்' ஊழியர்கள் தொடர்பான ஆய்வு**

தனியார் துறையைப் போன்றே அரச துறையிலும் 'மேன்பவர்' ஊழியர்களது சேவை அதிகளவில் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த ஊழியர்களுக்கான நியமனக் கடிதம், தொழில் உரிமைகள் அல்லது சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எதுவும் கிடைக்கப்பெறாத நிலையில் அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணும்பொருட்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதன்போது 132 'மேன்பவர்' ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு வினாக்கொத்தொன்று வழங்கப்பட்டு பின்வரும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

- ➢ தற்போதைய 'மேன்பவர்' ஊழியர்களது சமூக விஞ்ஞான இயல்புகள்.
  (வயது கட்டமைப்பு, திறன்கள், குடும்ப கட்டமைப்பு)
- ➢ தொழிலின் இயல்பு (நிரந்தரம் / தற்காலிகள் / சமயாசமய அடிப்படை)
- ➢ தொழிலின் தன்மையை கவனத்திற் கொள்ளுதல் (EPF/ETF பங்களிப்பு, அவசர விபத்து காப்புறுதி)

இந்த ஆய்வுகளின் மூலம் கீழே காட்டப்பட்டுள்ள சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டன.

- ‘மேன்பவர்’ ஊழியர்களது தொழிற்சூழல் தரத்தை விருத்தி செய்வதற்கு புதிய சட்டதிட்டங்களை உருவாக்குதல்.
- ‘மேன்பவர்’ ஊழியர்களின் சமூகப் பாதுகாப்பை விருத்தி செய்தல்
- ‘மேன்பவர்’ ஊழியர்களுக்கு தொழில், சமூக, சட்டப் பின்னணி தொடர்பில் அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- ‘மேன்பவர்’ நிறுவனங்களைத் தாபிக்கும்போது தொழில்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கான சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

## 02. இலங்கையில் வாடகை வாகனங்கள் துறையில் மனித வளப் பயன்பாடு தொடர்பான ஆய்வு

வசதியானதும், வினைத்திறன் மிக்கதாகவும் தற்காலத்தில் வாடகை வாகங்கள் சேவை முன்னேறி வருவதுடன் வாடகை வாகனங்களது எண்ணிக்கையும் அதிகர்த்த வண்ணம் உள்ளது. அதிகரித்து வரும் தொழிற் துறையொன்றில் ஊழியப் படைக்கான தொழில் வாய்ப்பும் அதிகரித்தல் வேண்டும். வாடகை வாகனங்கள் துறையில் உள்ள தொழில்வாய்ப்புத் தொடர்பில் ஆய்வு செய்தல் மற்றும் அத்தகைய தொழில்வாய்ப்புகளுக்குத் தேவையான திறன்கள் மற்றும் தகைமைகள் தொடர்பில் ஆய்வு செய்வதல் இதன் நோக்கமாகும். இந்த ஆய்வின் ஊடாக பின்வரும் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

- வாடகை வாகனங்கள் துறையில் நகரப் புறங்களைப் போன்றே கிராமப் புறங்களிலும் தொழிநுட்பத்தை பயன்படுத்துதலை விருத்தி செய்ய வேண்டியதுடன் அத்துறையில் ஏற்படுகின்ற ஏகாதிபத்தியத்தைத் தவிர்க்கும் பொருட்டு உள்நாட்டு சிறு முயற்சியாளர்களை அறிவுறுத்துதல் மற்றும் ஊக்கப்படுத்துதல்.
- பொதுப் போக்குவரத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகள் காரணமாக வினைத்திறனான சேவையைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, வாடகை வாகனங்களை நாடி மக்கள் செல்வதன் காரணமாக போக்குவரத்து நெரிசல்கள் அதிகரிக்கின்றன. இத்தகைய பிரச்சினைகளுக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.
- தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற வாடகை வாகனங்களுக்கும் மீற்றர்களைப் பயன்படுத்தும் வாகனங்களுக்கும் சரியான வாடகைகளைத் தீர்மானித்து உரிய நியமங்கள் பேணப்படுதல் வேண்டும்.

## 03. அரச துறையில் தொழில் விபரத் திரட்டு – 2018 (பாகம் II)

அரச துறையில் தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகமானோர் விரும்புகின்றனர். அதிலும் படித்த இளைஞர்களிடையே இதனை அதிகமாகக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் பலர் அரச துறைக்கு பிரவேசிக்கத்தக்க தகைமைகள் / வழிகள் யாது என்பதை அறியாமல் உள்ளனர். இதன் காரணமாக அரச துறைத் தொழில் வாய்ப்புக்களுக்கான கேள்விகளும் அதிகரித்து வருகின்றன.

மேற்கூறப்பட்ட நிலைமைகளைக் கருத்திற் கொண்டு இலங்கையின் அரச துறையில் காணப்படுகின்ற தொழில் விபரத் திரட்டு 2017ஆம் ஆண்டு வெளியடப்பட்டதுடன் இன்னமும் பற்பல அமைச்சுக்கள் திணைக்களங்களிலுள்ள தொழில் வாயப்புக்கள் தொடர்பான விபரங்கள், இரண்டாம் பாகத்தில் வெளிவரவுள்ளன. இந்த பாகத்தில் பெண்கள் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, ஆயுர்வேதத் திணைக்களம், இலங்கை கட்டிடங்கள் திணைக்களம்,இலங்கை நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை வர்த்தகத் திணைக்களம், இலங்கை தொல்பொருளியல் திணைக்களம், இலங்கை கலாச்சார அலுவல்கள் திணைக்களம், இலங்கை மதுவரித் திணைக்களம், இலங்கை காணித் திணைக்களம், இலங்கை புகையிரதத் திணைக்களம் என்பவற்றின் தகவல்கள் ஒரு வினாக்கொத்தின் ஊடாகவும், ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஊடாகவும் திரட்டப்பட்டன.

## 04. ஊழியச் சந்தைதகவல்களை உள்ளடக்கிய DVD இறுவட்டுகளைத் தயாரித்தல்.

இலங்கையில் ஊழியச்சந்தை தொடர்பான இற்றைவரைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்குதல் அத்தியாவசியமாகக் காணப்பட்டாலும் அத்தகைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றமை மற்றும் ஒருசில உத்தியோகத்தர்கள், ஊழியச் சந்தையின் இற்றைவரைப்படுத்தப்பட்ட தகவல்கள் தொடர்பில் அறிந்திராமை காரணமாக இத்தகைய தகவல்களை உள்ளடக்கிய DVD இறுவட்டுக்களைத் தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. எனவே 570 இறுவட்டுக்கள் தயாரிக்கப்பட்டு தலைமைக் காரியாலய உத்தியோகத்தர்கள், மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்களிலுள்ள தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தர்கள், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டன.

**05. சமூக பொருளாதார தரவுக் கைந்நூல்**

பாடசாலைக் கல்வியை நிறைவு செய்வதற்கும் உயர் கல்வியைத் தொடர்வதற்கும் முயற்சிக்கின்ற பிள்ளைகளுக்கான வழிகாட்டல்களை வழங்குவதற்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதார போக்குகள், விசேடமாக ஊழியச் சந்தை தொடர்பான அடிப்படை விளக்கத்தை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு வருடாந்தம் சமூகப் பொருளாதார தரவுக் கைந்நூல் வெளியிடப்படுகின்றது. அச்சிடப்பட்ட கைந்நூல்களை மாவட்டச் செயலகங்கள் ஊடாக 7674 படசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**06. தொழிற்சந்தை தகவல் கட்டமைப்பொன்றை உருவாக்குதல் தொடர்பான செயலமர்வு (LMIS Forum)**

இலங்கையில் தொழிற்சந்தைத் தகவல்களை சேகரிப்பதற்காக ஒருங்கிணைந்த தகவல் கட்டமைப்பொன்று இல்லாததன் காரணமாகவும், பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் மதிப்பீடுகளது தரவுகளுக்கிடையே சமமின்மை காணப்பட்டமையினாலும்,சரியான தரவுகளை உரிய தரப்பினருக்கு வழங்க முடியாதுள்ளது. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒருங்கிணைந்த தகவல் கட்டமைப்பொன்றை உருவாக்குவதற்கு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சும், எமது அமைச்சும் இணைந்து ஒரு மாநாடு நடாத்தப்பட்டது. எமது அமைச்சின் செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், கொள்கை ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர், கல்வி அமைச்சின் செயலாளர், தேசிய மனிதவள அபிவிருத்தி ஆலோசனை நிறுவனத்தின் தலைவர், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மேலதிக பணிப்பாளர் நாயகம், இலங்கை தொழிலாளர் சங்கத்தின் பிரதி பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட தரப்பினருக்கிடையே இந்த கலந்துரையாடல் செயலமர்வு நடாத்தப்பட்டது.

இதன் ஊடாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

- தொழிற்சந்தைத் தகவல்களைத் திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், விநியோகித்தல் தொடர்பில் உரிய தரப்பினரை அடையாளங் காணுதல்.
- இந்த தரப்பினரிடையே மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் ஊடாகத் தரவுகளைத் திரட்டிக் கொள்வதற்கும் பகுப்பாய்வு செய்வதற்குமான ஒரு முறைமையையும் கொள்கைக் கட்டமைப்பொன்றையும் உருவாக்குதல்.
- தொழிற்சந்தைத் தகவல்களை திரட்டும் போது அத்தகவல்கள் மற்றும் அதன் குறைபாடுகள் தொடர்பில் அறிந்து கொள்ளுதல்.

**07.தொழிற்சந்தை தகவல் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.**

தொழில்களை பொருத்தப்பாடுடையதாக்கும் பொருட்டும், தொழில் வழிகாட்டல் மற்றும் பயிற்சிக்காகவும், இத்திணைக்களத்தினால் Online சேவை கட்டமைப்பொன்று பேணிச் செல்லப்படுவதுடன் அதன் ஊடாக தொழிலை எதிர்பார்த்திருக்கும் இளைஞர்களிடையே காணப்படும் உயர் வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

2018ஆம் ஆண்டில் இந்த Online கட்டமைப்பை இற்றைவரைப்படுத்தும் நோக்குடன் சர்வதேச தொழில் அமைப்பின் நிதியுதவியின் கீழ் விசேட கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன்,இற்றைவரைப்படுத்தப்பட்ட தொழில்வாய்ப்பு கட்டமைப்பானது தற்போது ICTA நிறுவனத்தின் ஊடாக பேணிச் செல்லப்படுகின்ற Lanka Government Cloud இல் தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

**08. அரச துறையின் தொழில் விபரத்திரட்டு (பாகம் I)**

இந்தத் தொழில் விபரத்திரட்டானது ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டதுடன் அது தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**09.கடற்றொழில் துறையின் தொழில் விபரத் திரட்டு – 2017**

இந்த விபரத்திரட்டானது 2017ஆம் ஆண்டில் சிங்கள மொழியில் அச்சிடப்பட்டதுடன் அது தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை செயற்பாட்டு அலகு

இலங்கை தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கையானது 2012ஆம் ஆண்டு அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டது. இந்த தேசிய கொள்கையானது அப்போதைய சிரேʻட அமைச்சரவை செயலகத்தினது வழிநடத்தலின் மீதும் சர்வதேச தொழில் அமைப்பின் தொழிநுட்ப மற்றும் நிதிப் பங்களிப்பின் ஊடாகவும் உருவாக்கப்பட்டது. தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை என்பது இலங்கையில் மனித வள அபிவிருத்தி செயற்பாடுகளையும், இலங்கையருக்கு முழுமையானதும், சிறந்ததும், வினைத்திறனானதுமான தொழில்களை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற செயற்பாடுகளை நிருவகிக்கும் முழுமையான கொள்கைக் கட்டமைப்பாகும். ஒட்டுமொத்த அரச கொள்கைகளின் அடிப்படையில் அமைந்ததாக இந்த கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2018 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள்

- இலங்கை தேசிய மனிதவள மற்றும் வேலைவாய்ப்பு கொள்கையை அமுல்படுத்துவதற்கு உரிய அமைச்சுக்களிடமிருந்து செயற்றிட்டங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
- கொள்கைகளுக்கமைய தகவல் தொழிநுட்ப செயற்பாட்டு கட்டமைப்பைத் தாபித்தல்.
- கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் உரிய தரப்பினருடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளுதல்.
- கொள்கைகளுடன் தொடர்புடைய நிறுவனங்களிலுள்ள ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்குதல்.
- இலங்கை தேசிய மனித வள மற்றும் வேலைவாய்ப்பு கொள்கையை அமுல்படுத்துவது தொடர்பில் அரையாண்டு, இறுதியாண்டு முன்னேற்ற அறிக்கைகளை உரிய தரப்பினரிடமிருந்து பெற்று, முழுமையான கொள்கை அறிக்கைகளைத் தயாரித்தல்.

## 2018 ஆம் ஆண்டில்தேசிய மனித வளங்கள் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை செயற்பாட்டு அலகு நடைமுறைப்படுத்திய நிகழ்ச்சித் திட்டங்கள்

(01) 2018 ஆம் ஆண்டில் ஒவ்வொரு அமைச்சுக்களிடமிருந்தும் இந்த கொள்கைக்குரிய 2018-2020 இடைக்கால செயற்றிட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, அறிவுறுத்தல் கடிதங்களை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு அனுப்புதல் மற்றும் உரிய கொள்கைகளுக்கமைய 2018 -2020 ஆண்டுக்கான செயற்றிட்டத்தைத் தயாரிப்பதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்.

(02) அதனடிப்படையில் 10 அமைச்சுக்களிடமிருந்து வருடாந்த செயற்றிட்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் 2017ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களையும் சேர்த்து 25 அமைச்சுக்களையும் உள்ளடக்கிய விதத்தில் விபரமான செயற்றிட்டமொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(03) 2012 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்த கொள்கையானது அப்போது காணப்பட்ட அரசின் கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் 2017ஆம் ஆண்டில் திருத்தப்பட்டதுடன், தற்போதைய சமூக, பொருளாதார போக்குகளைக் கருத்திற் கொண்டு அந்த கொள்கையினை முழுமையாக மீளாய்வுக்கு உட்படுத்துவதற்கு பிரேரணை செய்யப்பட்டுள்ளது.

**2018ஆம் அண்டில் தொழிற்சந்தை தகவல் அலகின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், அதன் முன்னேற்றம், நிதி சாராம்சம்.**


| தொடர் இலக்கம் | பிரேரிக்கப்பட்ட செயற்பாடுகள் | முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் | முன்னேற்றம் | நிதி சாராம்சம் (ரூ.) | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒதுக்கப்பட்ட நிதி | செலவிடப்பட்ட நிதி |
| 01 | 'மேன்பவர்' ஊழியர்கள் தொடர்பான ஆய்வு | இறுதி அறிக்கைகளைத் தயாரிக்கும் செயற்பாடுகள் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறும். | 75% | 500,000.00 | 340,555.00 |
| 02 | இலங்கையில் வாடகை வாகனங்கள் துறையில் மனித வளங்களது பயன்பாடு தொடர்பான ஆய்வு | இறுதி அறிக்கையானது 2019 ஜனவரி மாதத்தில் தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. | 75% | 25,000.00 | - |
| 03 | அரச துறையின் தொழில் விபரத் திரட்டு – 2017 (I ஆம் பாகம் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது) | மொழிபெயர்க்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. | 100% | 94,580.00 | 94,580.00 |
| 04 | கடற்றொழில் துறையில் தொழில் விபரத்திரட்டு – 2017 தமிழ் மொழியில் மொழிபெயர்த்தல் | மொழிபெயர்க்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. | 100% | 50,405.00 | 50,405.00 |
| 05 | அரச துறையில் தொழில் விபரத்திரட்டு – 2017 (பாகம் II) | 1000 புத்தகங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டது. | 100% | 175,000.00 | 190,000.00 |
| 06 | சுயதொழில் தொடர்பாக மேலதிக அறிக்கையொன்றைத் தயாரித்தல். | இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. | 100% | - | - |
| 07 | தொழிற்சந்தைத் தகவல்கள் CD | ஊனு 570தயாரிக்கப்பட்டு விநியோக செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | 100% | 100,000.00 | 82,650.00 |
| 08 | தொழிற்சந்தைத் தகவல் கட்டமைப்பொன்றை உருவாக்குதல் தொடர்பான செயலமர்வு (LMI Forum) | செயலமர்வு நடாத்தப்பட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. | 100% | 822,365.00 | 744,836.00 |
| 09 | சமூக பொருளாதார தரவு கைந்நூல் | சிங்கள மொழியில் 5995 புத்தகங்கள் மற்றும் தமிழ் மொழியில் 2096 புத்தகங்களும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. | 100% | 750,000.00 | 722,781.00 |
| 10 | தொழில் சந்தை தகவல் கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல். | பிரேரிக்கப்பட்ட இடைக்கால அபிவிருத்தி செயற்பாட்டிற்குரிய அனைத்து செயற்பாடுகளும் (Requirements) மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அது இணையத் தளத்தில் இற்றைவரைப்படுத்தப்பட்டுள்ளது. | 90% | 500,000.00 | 515,470.00 |
| | II Design and Development of Mobile Application | இந்த ஒப்பந்தத்திற்குரிய செயற்பாடானது 06 மாத காலப்பகுதியுள் நிறைவுசெய்யப்பட்டு ஒப்படைக்கப்படவுள்ளது. அதனடிப்படையில் தற்போது Mobile App Freelancer மற்றும Freelancer Seeker ஆகிய பிரிவுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. | | | |

## 6.3 தொழில் நிலையம்

இந்தப் பிரிவானது மனிதவலு திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் ஆய்வு என்ற பிரிவின் கீழ் செயற்படுகின்றது. நாட்டின் 25 மாவட்டங்களிலும் இந்த தொழில் நிலையம் (Job Center /PES)நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பிரதான தொழில் நிலையம் பத்தரமுல்லை அலுவலக வளாகத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

**தொழில் நிலைய வலையமைப்பு**










பிரதான அலுவலகம்
9ஆம் மாடி
செத்சிறிபாய இரண்டாம் கட்டம்
பத்தரமுல்லை.

**மாவட்ட தொழில் நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளாவன:**

- தொழில்வாய்ப்பைத் தேடுவோரை பதிவு செய்தல்.
- வெற்றிடங்கள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.





- நிறுவனங்களிலுள்ள பதவி வெற்றிடங்களை விசாரித்தறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருப்போரது தொழில் வெற்றிடம் தொடர்பில் அட்டவணையொன்றைத் தயாரித்தல்.

- நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் தொழில் எதிர்பார்த்திருப்போரது தகைமைகளை உறுதிப்படுத்துதல்.
- தொழில்களை பொருத்துதல் மற்றும் நேர்முகப்பரீட்சைக்கு அனுப்புதல்.
- தொழில்களில் ஈடுபடுத்துதல் மற்றும் பின்னூட்டல்
- தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்.
- பயிற்சிகளுக்கான வசதிகளை வழங்குதல்.
- தொழில் நிலைமைகள் தொடர்பில் புள்ளிவிபரங்களை சேகரித்தல் மற்றும் அவற்றை வெளியிடுதல்.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளுக்கு வழிகாட்டுதல்.
- மாவட்ட தொழில் சந்தை நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கமைத்து நடாத்துதல்.




வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போரை பதிவு செய்யும் செயற்பாடானது பல முறைகளில் இடம்பெறுகின்றது. பிரதேச மட்டத்திலான மனித வள அபிவிருத்தி உதவியாளர்கள் மற்றும் தொழிற்சந்தைகள், தொழில் நிலையங்கள் ஊடாக வழங்கப்படுகின்ற தகவல்கள் ஊடாக இத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இதன் கீழ் தொழிலை எதிர்பார்த்திருப்போருக்கு அடிப்படை நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

திணைக்களத்தின் இணையத்தளத்தின்ழுடெைநெ தொழில் சேவைகளை வழங்கும் இணையத்தள நுழைவாயில் ஊடாகவும், தொழிலை எதிர்பார்ப்போர் பதிவு செய்து கொள்ள முடியுமென்பதுடன் தொழில் தருனர்களும் இதில் பதிவு செய்து தமது தேவைப்பாடுகளுக்கேற்ப வெற்றிடங்களுக்கான ஊழியர்களைத் தெரிவுசெய்துகொள்ள முடியும்.

அவ்வாறே தொழிலை எதிர்பார்த்திருப்போருக்கான தொழில் வழிகாட்டல், பயிற்சிகளில் ஈடுபடுத்துதல்,Career Me நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற ஆளுமை விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் இலவசமாக பங்குபற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு பல்வேறு திறன்களைக் கொண்ட தொழில் நிபுணர்களுக்கான சேவைகளை திணைக்களத்தின் இணையத்தள நுழைவாயில் ஊடாக பதிவு செய்து பெற்றுக்கொள்வதற்கும், அச்சேவைகளைப் பெற விரும்புவோர் தாம் வசிக்கும் பிரதேசங்களின் அடிப்படையில் சேவை வழங்குனர்களைத் தெரிவு செய்து கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்ட இந்த சேவைகளை கையடக்கத் தொலைபேசி செயலி (Mobile App.)ஒன்றினூடாக பெற்றுக் கொள்ள முடியுமான வகையில் மென்பொருள்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. திணைக்களத்தின் இணையத்தளம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திக்காக இரண்டு சிறிய கருத்திட்டங்கள் ஊடாக உலக தொழில் ஸ்தாபனத்தின்(ILO)அனுசரணை பெறப்பட்டுள்ளது.

__நிகழ்ச்சித்திட்ட சாராம்சம் - தேசிய தொழில் நிலையம்__

01. **தொழிலை எதிர்பார்த்திருப்பவர்களுக்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம்**

**நோக்கம்:** பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் எதிர்பார்த்திருப்போரை அறிவுறுத்துதல் ஊடாக அவர்கள் விரும்பிய தொழிற்றுரையை அறிந்து கொள்ளுதல் அல்லது தேவையான பயிற்சி / ஆலோசனைகளில் பங்குபற்றச் செய்தல்.

**02. மாவட்ட தொழிற்சந்தை நிகழ்ச்சித்திட்டம்**

மாவட்டத்தில் இருக்கின்ற தொழில் எதிர்பார்த்திருப்போருக்காக ஒழுங்கு செய்யப்படுகின்ற இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தொழில் வழங்குகின்ற நிறுவனங்கள் மற்றும் தொழிலை எதிர்பார்த்திருப்போர் ஒரே இடத்தில் சந்திப்பதற்கு வாய்ப்பளிப்பதன் காரணமாக, பொருத்தமான தொழில் வாய்ப்புகளை அறிந்து கொள்வதற்கும், தகைமைகளைப் பெற்ற இளைஞர்களை இதன் பால் ஈர்த்துக் கொள்வதற்கும் வழி ஏற்படுகின்றது.

**1. பதுளை தொழிற் சந்தை2018.10.22**









**2. கடுவலை பிரதேச தொழிற்சந்தை திட்டங்கள் - 2018.11.02**










03.**வர்த்தக செயலமர்வுகள்**

இது,மாவட்ட தொழில் நிலையத்தை அடிப்படையாகக் கொண்டதாக, அந்த மாவட்டங்களில் உள்ளதொழில் தருனர்களுக்கான செயலமர்வுகளை ஒழுங்கு செய்து திணைக்களத்தின் சேவைகளை அறிமுகப்படுத்தும் ஒரு திட்டமாகும். அதனடிப்படையில் 2018ஆம் ஆண்டில் அம்பாறை, களுத்துறை, கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. அதற்கு மேலதிகமாக முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை அடிப்படையாகக் கொண்டு, அவ்வலயங்களில் தாபிக்கப்பட்டுள்ள வர்த்தக நிறுவனங்களுக்கு இத்திணைக்களத்தின் சேவைகளை அறிமுகப்படுத்துவதற்காக,இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தபடுகின்றன. அதனடிப்படையில் 2018ஆம் ஆண்டில் பியகம, கட்டுநாயக்க, பல்லேகெலே மற்றும் வத்துபிட்டிவல ஆகிய முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களிலுள்ள வர்த்தகங்களுக்கு செயலமர்வுகள் நடாத்தப்பட்டன.

**04.விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

I. மனிதவலு மற்றும் தொழில்வாய்ப்பு திணைக்களம் மற்றும் தேசிய பயிலிளவல் மற்றும் தொழிநுட்ப பயிற்சி அதிகாரசபைக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று 2018.09.12ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டது.



II. தொழில் மற்றும் வேலைவாய்ப்பு கொள்கை அமுலாக்கல் மற்றும் ஆலோசனை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக இலங்கை மற்றும் தென்கொரியாவிற்கிடையில் 2018.08.02ஆந் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது.

III. அவ்வாறே எமது திணைக்களத்தினால் பொதுமக்கள் தொழில்வாய்ப்பு சேவைக்கானஉலக அமைப்பில் (World Association Public Employment Service)இலங்கைக்கான அங்கத்துவம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் மாவட்ட தொழில்வாய்ப்பு சேவை நிலையத்தின் ஊடாக பொதுமக்களுக்கு வினைத்திறனான சேவையை வழங்கும் நோக்குடன் அந்நிலையம் மீளப் பெயரிடப்பட்டது. அதனடிப்படையில் அனைத்து மாவட்ட நிலையங்களும் 'தொழில் நிலையம்' என்ற பெயரின் கீழ் மறுசீரமைக்கப்பட்டது. இதன் கீழ் அம்பாறை, யாழ்ப்பாணம்,குருணாகல், நுவரேலியா ஆகிய மாவட்டங்களில் நிலையங்கள் தாபிக்கப்பட்டன.

01. **"அம்பாறை தொழில் நிலையம்"அம்பாறை மாவட்டச் செயலகத்தில் 2018.08.16ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது.**






02. **"யாழ்ப்பாணம் தொழில் நிலையம்" யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் 2018.09.07ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. .**









03. “குருணாகல் தொழில் நிலையம்” குருணாகல் மாவட்டச் செயலகத்தில் 2018.08.06ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. .





04. “நுவரெலியா தொழில் நிலையம்” நுவரேலியா மாவட்டச் செயலகத்தில் 2019.01.02ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. .




## 6.3 தொழில் நிலையங்களின் முன்னேற்றம்

| | நிகழ்ச்சித்திட்டம் / செயற்பாடு | 2018 ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 2018/01/01ஆந் திகதி தொடக்கம் 2018/12/31வரையான முன்னேற்றம் | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | நிதி (ரூ.மில்) | பௌதீக | நிதி (ரூ.மில்) | |
| | **தொழில் நிலையம்** | | | | | |
| 01 | மாவட்ட தொழில் நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் திறந்து வைத்தல். | 4 | 2.750 | 4 | 3.169 | - |
| 02 | மாவட்ட தொழில் சந்தைகளை நடாத்துதல். | 7 | 1.000 | 7 | 1.267 | 6615 |
| 03 | வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போரை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 150 | 0.750 | 197 | 0.715 | 7597 |
| 04 | WAPES Membership– உலக மக்கள் வேலைவாய்ப்பு சேவை அமைப்பின் அங்கத்துவம் | 100% | 0.500 | | 0.311 | - |
| 05 | மாவட்ட தொழில் நிலையங்களை பேணிச் செல்லுதல். | 100% | 1.354 | 100% | 1.374 | |
| 06 | வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போரை பதிவு செய்தல் (பயனாளிகள்) | 371908 | | 121016 | | |
| 07 | வேலைவாய்ப்பு வெற்றிடங்களை பதிவு செய்தல். | 35402 | | 31933 | | |
| 08 | தொழில்களை இணக்கம் செய்தல் | | | 27546 | | |
| 09 | தொழிலில் ஈடுபடுத்துதல் (பயனாளிகள்) | 24097 | | 12807 | | |
| 10 | தொழில்தருனர்களுடனான செயலமர்வுகள் - Conducting of Employer Forums | 19 | 0.346 | 14 | 0.286 | |
| 11 | தேவைக்கேற்ப நடாத்தப்படும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் Tailo rmade Programmes for Companies and Job Seekers | 10 | 0.300 | 35 | 0.300 | - |
| | **முகாமைத்துவ தகவல் கட்டமைப்பு - ஆஜஜளு** | | | | | |
| 12 | அடிப்படை வர்த்தக ஆய்வுகள் - Business Analysis Study | 100% | 0.500 | 90% | 0.515 | - |
| 13 | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலுள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு மடிக்கணணிகளை கொள்வனவு செய்தல். | 100% | 5.000 | 100% | 4.925 | 47 |
| | **'சுனிசி மெஹெவர' திட்டம்** | | | | | |
| 14 | தேசிய மட்டத்தில் மனித வள வேலைவாய்ப்பு கொள்கைகளை அமுலாக்குதல். | 100% | - | 20% | 0.005 | - |
| 15 | "லக் ரெகியா ஹரசர" இலங்கை தொழில் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் * | 100% | 2.160 | 100% | 1.833 | - |
| 16 | முயற்சியாண்மை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 10 | 0.337 | 13 | 0.337 | 484 |
| 17 | நுவரேலியா மாவட்ட தொழில் நிலையத்தை ஆரம்பித்தல் * | 100% | 0.902 | 100% | 0.772 | - |
| 18 | கொரிய இராஜதந்திர பங்களிப்புடனான வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கொள்கை ஆலோசனை நிகழ்ச்சித்திட்டம் * | 100% | 0.128 | 100% | 0.128 | - |
| 19 | தேவைக்கேற்ப பயிற்சி – விசேட பயிற்சித் திட்டம் * | 9 | 0.204 | 9 | 0.205 | 381 |

**<u>6.3.1 தொழிலில் ஈடுபடுத்துதல் 2018.12.31ஆந் திகதி வரையான முன்னேற்றம்</u>**

| | மாவட்டம் | நேரடியாக தொழிலில் ஈடுபடுத்துதல் | | சுயதொழிலில் ஈடுபடுவோர் ∴ முயற்சியாளர்களை உருவாக்குதல் |
|---|---|---|---|---|
| | | மாவட்ட தொழில் நிலையங்கள் ஊடாக | பிரதேச செயலக மட்டத்தில் | |
| 01 | கொழும்பு | 408 | 294 | 15 |
| 02 | கம்பஹா | 349 | 352 | 92 |
| 03 | களுத்துறை | 205 | 589 | 64 |
| 04 | கண்டி | 490 | 427 | 63 |
| 05 | மாத்தளை | 139 | 172 | 6 |
| 06 | நுவரேலியா | 0 | 131 | 0 |
| 07 | காலி | 176 | 409 | 115 |
| 08 | மாத்தறை | 163 | 496 | 90 |
| 09 | அம்பாந்தோட்டை | 236 | 365 | 57 |
| 10 | யாழ்ப்பாணம் | 442 | 259 | 206 |
| 11 | மன்னார் | 105 | 76 | 49 |
| 12 | வவுனியா | 148 | 68 | 38 |
| 13 | முல்லைத்தீவு | 24 | 0 | 20 |
| 14 | கிளிநொச்சி | 32 | 78 | 80 |
| 15 | மட்டக்களப்பு | 113 | 122 | 206 |
| 16 | அம்பாறை | 277 | 447 | 442 |
| 17 | திருகோணமலை | 113 | 61 | 116 |
| 18 | குருணாகல் | 511 | 1196 | 521 |
| 19 | புத்தளம் | 31 | 242 | 109 |
| 20 | அநுராதபுரம் | 165 | 112 | 65 |
| 21 | பொலனறுவை | 150 | 50 | 38 |
| 22 | பதுளை | 561 | 126 | 104 |
| 23 | மொணறாகலை | 118 | 147 | 10 |
| 24 | இரத்தினபுரி | 192 | 394 | 131 |
| 25 | கேகாலை | 626 | 420 | 116 |
| | **மொத்தம்** | 5774 | 7033 | 2753 |

# மொத்த வேலைவாய்ப்பு – 15560

### 6.3.2 மாவட்ட தொழில் சந்தை திட்டத்தின் முன்னேற்றம் -2018

| | மாவட்டம் | இடம் | நடாத்தப்பட்ட திகதி | தொழில் எதிர்பார்ப்பவர்களது எண்ணிக்கை | பங்குபற்றிய நிறுவனங்களின் எண்ணிக்கை | பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை | தொழிலில் ஈடுபடுத்துதல் | தொழில்களைப் பொருத்துதல் | செலவு (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | மாத்தளை | பாக்கியம் தேசிய பாடசாலை | 2018/03/24 | 549 | 13 | 02 | 44 | 313 | 107,670 |
| 02 | அம்பாறை | மாவட்டச் செயலகம் | 2018/05/05 | 1876 | 12 | 06 | 68 | 516 | 94,500 |
| 03 | அநுராதபுரம் | நிவந்தக சேத்திய தேசிய பாடசாலை | 2018/05/26 | 425 | 25 | 6 | 42 | 214 | 123,055 |
| 04 | யாழ்ப்பாணம் | வெம்பர்ட் மகளிர் கல்லூரி | 2018/07/21 | 985 | 33 | 10 | 191 | 479 | 144,100 |
| 05 | பதுளை | சேனாநாயக்க மைதானம் | 2018/09/22 | 1350 | 34 | 08 | 163 | 563 | 298,500 |
| 06 | இரத்தினபுரி | தர்மபால கல்லூரி | 2018/10/13 | 645 | 30 | 10 | 114 | 771 | 207,042 |
| 07 | வவுனியா | மாவட்டச் செயலகம் | 2018/10/30 | 785 | 20 | 09 | 28 | 85 | 161,908 |
| | **மொத்தம்** | | | 6615 | 167 | 51 | 650 | 2941 | 1,136,775 |

### 6.3.3 தொழில் தருனர்களுடன் நடாத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்

| திகதி | இடம் | பங்கேற்பு (நிறுவனங்களின் எண்ணிக்கை) | செலவுத் தலைப்பு | செலவு (ரூ) |
|---|---|---|---|---|
| டீழுஐ இன் கீழ் பதிவு செய்யப்பட்ட முயற்சியாண்மை நிறுவனங்களுடனான கலந்துரையாடல் | | | | |
| 2018 பெப்ரவரி 27 | பியகம | 14 | - | - |
| 2018ஏப்பிரல் 02 | கட்டுநாயக்க | 13 | 2 - 2509 | 1,180.00 |
| 2018ஏப்பிரல்27 | பல்லேகெலே | 18 | 2 - 2509 | 650.00 |
| 2018 மே 30 | வத்துபிட்டிவல | 10 | 2 - 2509 | 1,145.00 |
| மாவட்ட முயற்சியாண்மை செயலமர்வு | | | | |
| 2018ஏப்பிரல்18 | அம்பாறை | 8 | 11 - 2509 | 11,625.53 |
| 2018ஏப்பிரல் 26 | களுத்துறை | 52 | 2 - 2509 | 35,450.00 |
| 2018 ஜுன்12 | கொழும்பு | 25 | 2 - 2509 | 59,590.00 |
| 2018 ஜுன்20 | யாழ்ப்பாணம் | 35 | 11 - 2509 | 32,500.00 |
| 2018 ஜுன்25 | கம்பஹா | 47 | 2 - 2509 | 51,100.00 |
| 2018 ஜுலை25 | மாத்தறை | 74 | 2 - 2509 | 40,710.00 |
| 2018 செப்டெம்பர்13 | இரத்தினபுரி | 43 | 2 - 2509 | 46,080.00 |

தொழில் தருனர் மற்றும் மாவட்ட தொழில் நிலையம் மற்றும் தேசிய தொழில் நிலையம் என்பவற்றுக்கிடையே அதாவது ஒட்டுமொத்தமாக திணைக்களத்தற்கும், திணைக்களத்தின் சேவைகளை வழங்கக்கூடிய தொழில் தருனர்களிடையேயும், சிறந்த உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதன் ஊடாக தொழில் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுதல், வழங்குதல், பரஸ்பர ரீதியில் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுதல், இதன் முக்கிய நோக்கமாகும்.

6..3.4‘**சுனிசி மெஹெவர’ திட்டத்தின் முன்னேற்றம்**

### 6.3.4.1 முயற்சியாண்மை அபிவிருத்தித் திட்டங்கள்

| தொடர் இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | நிகழ்ச்சி நடாத்தப்பட்ட திகதி | செலவுகள் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | காலி | அம்பலாங்கொடை | 2018 ஜுன் 4,5,6 | 21,050 |
| 02 | புத்தளம் | ஆணைமடு | 2018 ஜுலை 9,10,11 | 21,130 |
| 03 | குருணாகல் | கல்கமுவ | 2018 ஜுலை 23,24,25 | 25,859 |
| 04 | பொலனறுவை | வெலிகந்த | 2018 ஓக. 14,15,16 | 21,050 |
| 05 | நுவரேலியா | கொத்மலை | 2018 ஓக. 23,24,25 | 22,120 |
| 06 | வவுனியா | வவுனியா | 2018 ஓக. 27,28,29 | 21,050 |
| 07 | அநுராதபுரம் | கலென்பிந்துனு வெவ | 2018 செப். 6,7,8 | 27,710 |
| 08 | கண்டி | கங்க இஹல கோரளை | 2018 செப். 19,20,21 | 21,050 |
| 09 | கேகாலை | வரக்காப்பொல | 2018 செப். 26,27,28 | 21,050 |
| 10 | கொழும்பு | கடுவளை | 2018 செப். 26, ஒக்.10,11 | 21,050 |
| 11 | காலி | அம்பலாங்கொடை | 2018 நவ14,15,16 | 26,850 |
| 12 | அம்பாறை | லாஹுகல | 2018 ஒக்.31, நவ.1,2 | 21,050 |
| 13 | கொழும்பு | ஹோமாகம | 2018 நவ.13,21,23 | 24,460 |
|  | **மொத்தம்** |  |  | 295,479 |

### 6.3.4.2 விசேட கருத்திட்டம் - தேவைக்கேற்ப பயிற்சித் திட்டங்கள்

| தொடர் இலக்கம் | மாவட்டம் | பிரதேச செயலகப் பிரிவு | நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சி நடாத்தப்பட்ட திகதி | செலவு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| 01 | கொழும்பு | மொறட்டுவை | சாரி பிளவுஸ் தைத்தல் | 2018 நவ15,16 | 11,100 |
| 02 |  | கடுவளை | கேக் தயாரித்தல் | 2018 டிச.03,6,11 | 34,879 |
| 03 |  | கோட்டை | திரைச்சீலை தைத்தல் | 2018 நவ.19,21,23,26 | 23,200 |
| 04 |  | ஹோமாகமை | அழகுக் கலை | 2018 நவ19,21,23 | 19,450 |
| 05 |  | கெஸ்பாவை | திரைச்சீலை தைத்தல் | 2018 நவ.30, டிச.3,4,6,7 | 32,650 |
| 06 | கோகலை | மாவட்டச் செயலகம் | தேன் பூச்சி வளர்ப்பு | 2018 நவ.29 | 21,150 |
| 07 |  | வரகாப்பொல | வீட்டு மின்சாதனப் பொருட்கள் திருத்தம் | 2018 டிச.4,5 | 12,000 |
| 08 |  | தெரணியகல | விற்பனையும் பொதியிடலும் | 2018 டிச.4,5,6 | 40,075 |
| 09 | குருணாகல் | குளியாப்பிட்டிய – மேற்கு | ஆடை தைத்தல் | 2018 நவ.27,29 | 10,600 |
|  | **மொத்தம்** |  |  |  | 205,104 |

### 6.3.4.3 'லக் ரெக்கியா ஹரசர' இலங்கை தொழில்வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம்




இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2018ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆந் திகதி சுஹுருபாய பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது. இது தொழில் தருனர்கள் மற்றும் திணைக்களத்தின் ஊழியர்கள் ஆகிய இரு தரப்பினருக்கிடையேயும் இடம்பெறுகின்ற பரீட்சார்த்த கருத்திட்டமாகும். இதன்போது தொழில்களை வழங்குதல் ஏனைய வசதிகளை வழங்குதல் தொடர்பில் தொழில்தருனர்கள் பாராட்டிற்குட்படுத்தப்பட்டார்கள். அவ்வாறே தொழில் எதிர்பார்த்திருப்போரை தொழிலில் ஈடுபடுத்துவதை முன்னுரிமையாகக் கொண்ட, வருடாந்த செயற்றிட்டங்களது இலக்குகளை அடைந்து கொள்ளுதல் தொடர்பில் திணைக்களத்தின் ஊழியர்கள் பாராட்டப்பட்டனர். இதன்போது குழுமனப்பான்மையைக் கட்டியெழுப்புதல், ஒவ்வொரு ஊழியர்களதும் ஆற்றல்களை வலுப்படுத்தி உயரிய வினைத்திறனைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக திணைக்களத்தின் மனித வளங்கள் ஊடாக தேசிய நோக்கங்களை அடைந்து கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. மாவட்ட மட்டத்தில் திணைக்களத்தின் ஊழியர்கள் பாராட்டப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட மூன்று மாவட்டங்களிலுள்ள தொழில் தருனர்கள் பாராட்டிற்குட்படுத்தப்பட்டனர். இப்பரீட்சார்த்த திட்டத்தில் யாழ்ப்பாணம், குருணாகல், அம்பாறை ஆகிய மாவட்டங்களிலுள்ள தொழில்தருனர்கள் பாராட்டப்பட்டனர். இந்த கருத்திட்டத்திற்கு தேசிய கொள்கை அமுலாக்கல் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் 2019 – 2021 இடைக்கால வரவு செலவுத்திட்ட கட்டமைப்பின் ஊடாக ஒதுக்குகளைப் பெற்றுக் கொள்ள சிபாரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

### 6.3.4.4 கொரிய இராஜதந்திர தலையீட்டின் மீது வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கொள்கை ஆலோசனை திட்டங்கள்

கொரிய குடியரசானது வெளிநாடுகளுடன் விசேடமாக தொழில்வாய்ப்பு மற்றும் தொழில் துறை தொடர்பில் இருதரப்பு தொடர்புகளைப் பேணும்போது விசேட முக்கியத்துவத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது. 2016ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நடவடிக்கைகள் தொடர்பான கொரிய அமைச்சானது இலங்கையில் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சுடன் ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தது. 2018ஆம் ஆண்டில் இது தொடர்பில் கொரிய பேராசிரியர்கள் உள்ளிட்ட வேலைவாய்ப்பு, தொழில் வழிகாட்டல், பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவைகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பிலான ஒரு குழு இலங்கைக்கு விஜயம் செய்தது. இதன்போது கொரிய குடியரசுடன் வேலைவாய்ப்பு மற்றும் பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவை தொடர்பில் இருதரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இம்முறை, பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவையின் கட்டமைப்பு, தொழில் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் online பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவையை வழங்குதல் தொடர்பில் கொரிய அனுபவங்கள்இத்திணைக்களத்துடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அவ்வாறே கொரிய குடியரசின் பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவையானது, தற்போதைய நிலைமைக்கு வருவதற்கு முன்னர் அடைந்த மைல்கற்கள், பிரச்சினைகள், அப்பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்ட விதம் தொடர்பில் எமது திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. கொரிய குடியரசின் வெற்றிகரமான முன்மாதிரிகளது (Benchmark) உதவி மற்றும் ஆலோசனைகளின் ஊடாக இலங்கையின் 'பொதுமக்கள் வேலைவாய்ப்பு சேவையை' அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான செயற்றிட்டங்களைத் தயாரிப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### 6.3.4.5 நுவரெலியாவில் தொழில் நிலையத்தை திறந்து வைத்தல்.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களமானது மாவட்ட தொழில் நிலையங்களைத் தாபிப்பதன் ஊடாக பின்வரும் விடயங்களை அடைந்து கொள்ள எதிர்பார்க்கினறது.

I. மாவட்டத்தில் இளைஞர்களிடையே காணப்படும் வேலையின்மையை குறைத்தல்.
II. தொழில்வாய்ப்பை எதிர்பார்த்திருப்போரை பதிவு செய்தல்.
III. தொழில் வெற்றிடங்களைப் பதிவு செய்தல்.
IV. தொழில்களைப் பொருத்துதல் மற்றும் தொழிலில் ஈடுபடுத்துதல்.
V. தொழிற்சந்தை தொடர்பில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கு அறிவுறுத்துதல்
VI. தமது விருப்பத்திற்குரிய தொழில் துறையில் நுழைவதற்கு வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கு பயிற்சி நிறுவனங்களை அறிமுகப்படுத்துதல்.
VII. மாவட்டத்தில் இளைஞர்களிடையே காணப்படுகின்ற வேலையின்மையைக் குறைத்தல்.

இதன்போது, ஒரு நிலையத்தின் ஊடாக தொழில்வாய்ப்பு தொடர்பிலான அனைத்து சேவைகளையும் வழங்கும் முறையொன்று பிரதானமாக முன்னெடுக்கப்படுகின்றது. இதற்காக நுவரேலியா தொழில் நிலையமானது 2018ஆம் ஆண்டில் 'சுனிசி மெஹெவர' ஒதுக்கின் மூலமாகத் தாபிக்கப்பட்டது.